# கொழுந்து

நவம்பர்
டிசம்பர்
1997









15/=

மலையக கலை இலக்கியப் பேரவை

கொழுந்து வளர
வாழ்த்திறோம்



அனோஜா ஐஸ்கிரீம் ஹவுஸ்

34, இராஜ வீதி, மாத்தளை.

தொலைபேசி : 066-22555





நாவிற்கினிய நற்சுவைமிக்க ஐஸ்கிறீம் மற்றும் ஐஸ் பழங்கள்
சில்லறையாகவும் மொத்தமாகவும் கிடைக்குமிடம்.




ஒளி ஓவியரிடம்
ஒரே ஒரு கேள்வி !

# காதல் கோட்டை
# கரு வேலம் பூக்கள்

போன்ற தமிழ்படங்களின் ஒளிப்பதிவு டைரக்டரான தங்கர்பாச்சன், கமரா நிபுணர் மட்டுமல்ல. **ஒன்பது ரூபாய் நோட்டு** நாவலின் படைப்பாளி, **வெள்ளை மாடு** கதைத்தொகுதியின் ஆசிரியர்

இவரிடம் கொழுந்து வாசகர்கள் ஒரே ஒரு கேள்வியை கேட்கலாம். உங்கள் கேள்விகளை தபாலட்டையில் எழுதி கீழே உள்ள முகவரி வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

ஒரே ஒரு கேள்வி!
கொழுந்து
த. பெ - 32
கண்டி,

# 'கொழுந்து'

வளர

எமது இலக்கிய சோலையின்

இனிய வாழ்த்துக்கள்!

★★★★

★★★

★★

★

- ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள்
- தமிழக எழுத்தாளர்களின் நூல்கள்
- அகராதிகள், ஆய்வு நூல்கள்
- அறிவு நூல்கள் - பாடத்துணை நூல்கள்
- மாணவர் பயிற்சி நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்

## பூபாலசிங்கம் புத்தகசாலை

| | |
|---|---|
| 340, செட்டியார் தெரு, | 257/1A காலி வீதி, |
| கொழும்பு -11 | வெள்ளவத்தை |
| தொலைபேசி :422321 | கொழும்பு |
| தொலைநகல் :337313 | தொ.பே.074-515775 |


வெள்ளம் போல் கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருட ரெல்லாம்
விழிப் பெற்று பதவிக் கொள்வார்.

மகாகவி பாரதி


இதழ் 12

# கொழுந்து

நவம்பர் டிசம்பர் ஜனவரி 1998


## மலையகக் கல்வி

மலையகக் கல்வி பற்றிய ஒரு விழிப்புணர்வு
அண்மைக்காலத்தில் மலையகம் எங்கும் முகிழ்ந்துள்ளது

கண்டியிலுள்ள சமூக அபிவிருத்தி நிறுவகம்
செப்டெம்பர் மாதம் மலையக கல்வி பற்றிய காத்திரமான
இருநாள் கருத்தரங்கை கண்டியில் நடாத்தியது.

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் டிசம்பர் முதல் வாரம்
கொழும்பில் மலையகக் கல்வி சம்பந்தமான
கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த இரண்டு கருத்தரங்குகளிலும்
மலையகத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள்
கலந்து கொண்டு கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இவர்களின் கருத்துக்கள் காற்றோடு காற்றாக போய்விடாமல்
கல்வி அமைச்சு அதனை செயல்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் நமது பிரதிநிதிகள்
பத்துபேரும் இதற்காக குரல் கொடுக்க வேண்டும்.

எதிர்கால இளந் தலைமுறையினரின்
நன்மையைக் கருதி இதனை இவர்கள் செயல்படுத்த வேண்டும்.

[illegible]

கொழுந்து
சிறப்புற வெளிவர
எமது வாழ்த்துக்கள்

PARA EXPO PRODUCTS (PVT.) LTD

Exporters of Non Traditional Sri Lanka Foods.

30, Sea Avenue,
Colombo - 3.
Tel: 573717

கவிஞர் குறிஞ்சி தென்னவனின்

# வாழ்வும் பணியும்

பவாணி பீ.ஏ

நுவரெலியா லபுக்கல்லை மேற்பிரிவைச் சேர்ந்த திரு.வி.எஸ்.வேலு என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் தென்னவன் ஈழத்துப் பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதி ஈழத்துக் கவிஞர்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகின்றார்.

அட்டன் நோர்வுட் சென்.ஜோன்ஸ் தோட்டத்தில் 1934ம் ஆண்டு மார்ச் மாதம் பன்னிரண்டாம் திகதி முருகம்மாள், சுப்பையா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். துயரம் தோய்ந்த சூழ் நிலையில் பிறந்து அச்சூழலிலேயே போராட்டத்துடன் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்காளானார்.

ஆரம்பக் கல்வியை "கல்மதுரை" தோட்டப் பாடசாலையில் தொடங்கி மூன்றாம் வகுப்பு வரை கற்று பின் லபுக்கலையில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்றார். இத்துடன் இவரின் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. படிக்க வேண்டுமென்ற ஆர்வமிருந்தும் அவ்வாசை வறுமை காரணமாக நிறைவேறவில்லை.

1946 ம் ஆண்டு ஐந்தாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டு தமது தந்தையும், தாயும் செய்த தொழிலையே தாமும் ஒரு தொழிலாளியாகி உழைக்கத் தொடங்கினார்.

"உழுதுண்டு வாழ வழியில்லை: தொழுதுண்டு பின் செல்லவும் மனமில்லை தோட்டத் தொழிலாளியானேன்" என்கிறார் கவிஞர் குறிஞ்சித் தென்னவன்.

1962 ஆம் ஆண்டு தமது இருபத்தெட்டாவது வயதிலே திருமணம் செய்து கொண்டார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் தமது மூத்த மகளான மணிமேகலையை இழந்த போது துயரத்தில் வெதும்பிப் போனார். தமது மகளின் இழப்பினால் தமக்குண்டான சோகத்தைக் "கண்ணீர் அஞ்சலி" என்ற கவிதையில் உருக்கமாக வடித்துள்ளார்.

இளம் பராயத்திலே படிப்பை நிறுத்திக்கொண்டு தொழிலாளியாக மலை மண்ணிற்குத் தமது வியர்வையைச் சிந்தத் தொடங்கிய போதே இயல்பாகவே இலக்கியத் தாகமும் ஏற்படத் தொடங்கியது. அன்று தொடங்கிய தாகமே இன்று அவரை மலையகத்தில் சிறந்த ஒரு பிறவிக் கவிஞனாக இனங்காட்டிக் கொண்டிருக்கின்றது.

புதுமைக் கவிஞர் பாரதியும் பாரதிதாசனும் தான் தமது ஆற்றலுக்கு வித்திட்டதாகக் கூறிக்கொள்ளும் கவிஞர் தென்னவன் இடைவிடாது பல நூல்களைக் கற்றதன் பயனாகவே தனக்கு இலக்கணச் செழுமை ஏற்பட்டதாக கூறுகின்றார்.

சிறு வயதிலேயே பாரதம், இராமயணம் முதலியன படித்து தம் அயலவர்களைக் கூட்டி வியாக்கியானம் செய்யத் தொடங்கியுள்ளார். இவ்வசாதாரண திறமை அவருக்கு எட்டு வயதிலேயே ஏற்படத் தொடங்கியது.

அம்மானை, குறவஞ்சி, நளமகாராசன் கதை என்பவற்றைக் கற்றுத் தேர்ந்ததுடன், கல்கி, ஆனந்த விகடன், சுதேசமித்திரன், கங்கை, பாப்பாமலர், அம்புலிமாமா முதலிய இந்திய பத்திரிகைகளிலும் ஆர்வம் கொண்டார். மருதானை சித்ரா வித்தியாலயம் ஆகிய இடங்களில் தபால் மூலம் ஆங்கிலம் கற்றதுடன் இந்தியிலும் ஓரளவு பரிச்சயம் உள்ளவராகத் திகழ்ந்தார்.

பதினென் சித்தர் பாடல்கள், நந்தனார் கீர்த்தனை, பஜனைப்பாடல்கள் என்பவற்றைப் படித்து நூறு பாடல்கள் வரை பாடியுள்ளார். "மனதில் தோன்றுகின்ற எண்ணங்களின் பயிற்சியே கவிதையாய் உருவெடுக்கின்றது" என்கிறார். இலக்கணம் தெரியாமலேயே உணர்வு, பூர்வமாக எழுதும் இவரின் கவிதைகள் இலக்கண சுத்தத்துடன்அமைந்து விடுகின்றன. மார்கழி மாதத்தில் தோட்டங்களில் பஜனை பாடுவது வழக்கம். அப்பஜனைக்குப் பக்திப் பாடல்கள் எழுதியது மட்டுமன்றி தாமே பாடியும் வந்தார். இதன் காரணமாக கவிதைகள் இயற்றும் பக்குவத்தைப் பெற்றார்.

தான் முதன் முதலாக எழுதிய பாடல் பற்றிக் குறிப்பிடுகையில், "தமது இருபதாம் வயதிலே ஒரு மழை நாளின் போது வீதியில் சென்று கொண்டிருக்கையில் அருகில் உள்ள முருகன் ஆலயத்தைப் பார்த்து "நானே உனை நம்பினேன்" என சிந்தனையில் இயற்றி அதனை எழுதிப் பஜனையில் பாடினார். இதுவே அவர் முதன்முதல் எழுதிய பாடல் என்றும் அதனைத் தொடர்ந்து இருபது வயது முதல் இருபத்தியாறு வயதுவரை



சுமார் 100 பாடல்கள் வரை எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். இதுவே அவரின் படைப்பாற்றலின் ஆரம்பம் எனலாம்.

தென்னவனின் முதற் கவிதை 1957 ஆம் ஆண்டு "மாணவர் மலர்" என்ற ஏட்டில் வெளியானது. அதன் தலைப்பு "வெல்க உரிமைப் போர்" என்பது, இதனைத் தொடர்ந்து இவரின் கவிதைகள் பத்திரிகைகளிலும் கவியரங்கங்களிலும் தொடர்ந்து பிரகாசித்து வந்ததுடன் கவிதா ஆற்றல் வீறுபெறத் தொடங்கியது. அரசியல், தொழிலாளர், தொழிற் சங்கம், மொழிப் பிரச்சினை முதலியன பற்றிப் புதிய வீச்சுடன் படைக்கத் தொடங்கினார்.

தொழிலாளர் துயருறும் போது ஆறுதல் கூறும் கவிதைகள், போராட்டம் என்றால் போர்பணி கூட்டும் கவிதைகள், சமூக சீர்கேடுகள் அகற்ற சீர்திருத்தங்கள் அம்பலப்படுத்தும் உணர்வுள்ள கவிதைகள் என்றெல்லாம் வீறுபெற்ற கவிதைகளாகப் பரிணமிக்கத் தொடங்கின.

தோட்டத்தில் நடக்கும் தில்லுமுல்லுகள் தோட்ட உத்தியோகத்தினரின் வன்செயல்கள், தொழிற் சங்க கெடுபிடிகள் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் நிலை என்பவைகளே அடிப்படையாகக் கொண்டு கும்மி, கோலாட்டம், நாடகம் ஆகியவை இயற்றினார். கவிதைகள் மூலம் சாடினார். இது காரணமாக அதிகாரிகளின் அடக்கு முறைக்கு ஆளாகி, அவதிப்பட்டுத் தொழிலையும் இழந்து துன்பமுற நேர்ந்தது. அத்துடன் கவிஞரின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். எனவே, புகலிடம் அற்று வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

1967ஆம் ஆண்டு இலங்கையில் இருவரும் ஓர் "எழுத்தாளர் என்று" சிந்தாமணியினால் அங்கிகரிக்கப்பட்டு, "தினபதி" கவிதா மண்டலம் இவரை ஏற்றுக் கொண்டது.

இக்காலத்தில் யாப்பிலக்கணம் கற்று வெண்பா போட்டிகளில் கலந்து கொண்டார். சுதந்திரன், தென்றல், வீரகேசரி, பத்திரிகைகள் வெண்பாப் போட்டியையொட்டி ஈரடி தலைப்பு தர பல வெண்பாக்களை எழுதினார். "ஒரு மிளகாய்ப் பாடல்" என்ற தலைப்பில் இவர் எழுதிய வெண்பாசுவை பொருந்தியதாகவுள்ளது.

இதுவரை 67 கவியரங்குகளில் பங்குபற்றி, 1987 ஆம் ஆண்டு ஜனவரியில் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் “கவிச்சுடர்” பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 1992 ல் சாகித்திய விழாவில் “தமிழ் மணி” எனும் பட்டம் பெற்றார்.

இவரின் கவிதைப் படைப்புக்கள் ஈழத்தில் மாத்திரமன்றி, தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவியுள்ளது. சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகள் இவர் கவிதைகளைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது. கலாசார அமைச்சு “கலா பூஷனம்” விருதும் பணப்பரிசு பத்தாயிரமும் வழங்கி கௌரவித்துள்ளது. மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சும் இவரை கௌரவித்து சிறப்பித்துள்ளது.

(மலையகத்தின் மூத்த கவிஞரான குறிஞ்சி தென்னவன் 19-01-1998 அமரரானார். குறிஞ்சி தென்னவன் கவிதைகள் ஓர் ஆய்வுகள் என்ற என்ற தலைப்பில் தமிழ்ச்சிறப்புக் கலைமானித் தேர்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் ஓர் அத்தியாயமே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

## அட்டையில்

மலையக சிறுகதை இலக்கியத்திற்கு மகுடம் சூட்டிய இருவர். ஒருவர் சிறுகதைகளை தொகுத்த தெளிவத்தை ஜோசப், மற்றவர் துரைவி பதிப்பகத்தின் மூலம் மலையக சிறுகதைகள் (33 மலையக எழுத்தாளர்களின் சிறுகதைகள்) உழைக்கப் பிறந்தவர்கள் (55 எழுத்தாளர்களின் மலையகக் கதைகள்) பதிப்பித்து வெளியிட்ட இலக்கிய ஆர்வலர் துரை. விஸ்வநாதன் நடுவில் சிறிய படம் மலையக இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான க.ப.சிவம், கீழே உள்ள படத்தில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் மலையக கல்வி சமபந்தமாக இரு நாட்கள் நடைபெற்ற கருத்த ரங்கை பேராசிரியர் எஸ். தில்லைநாதன் குத்து விளக்கேற்றி தொடக்கி வைக்கிறார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு எஸ். ராஜரட்ணம் (கண்டி) எஸ். சதாசிவம் (நுவரெலியா) திரு.பி.பி.தேவராஜ் (கொழும்பு) ஆகியோர் காணப்படுகின்றனர்.

(அட்டை அமைப்பு:ஓவியர் குணம்)



தமிழ் வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும்
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

**ரிஸானா புக் சென்டர்**

எமது **ரிஸானா புக்** சென்டருக்கு ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புலனாகும்.

**சகல வகையான நூல்களும் எம்மிடம் உண்டு.**

- இஸ்லாமிய. தமிழ். சிங்கள. இலக்கிய. நாவல்.
- சிறுகதைகள். கவிதை நூல்கள்
- ஜீ. சீ. ஈ. O/L ஜீ. சீ. ஈ. A/L பரீட்சை ஆவணங்கள் வழிகாட்டி நூல்கள் வினாவிடை பத்திரங்கள்.
- சர்வதேச பாடசாலைகளுக்கான நூல்கள்
- காகிதாதிகள்

***நியாய விலையில் வாங்கலாம்***

*10%* வீத கழிவு நேரடி கொள்வனவுக்கு வழங்கப்படும்
*15%* வீத கழிவு பாடசாலைகளுக்கும், நூலகங்களுக்கும் வழங்கப்படும்.
*20%* வீத கழிவு 5000 ரூபாவுக்கு மேற்பட்ட கொள்வன்வுகளுக்கு வழங்கப்படும்.

**ரிஸானா புக் சென்டர்**
***RIZANA BOOK CENTRE***
**"ABDULLA COMPLEX"**
**20/14, SYMONDS ROAD, MARADANA, COLOMBO - 10.**
**T. P: 591038,** *(காலை 8 மணிமுதல் பகல் 1 மணிவரை)*
**T. P: 508153,** *(பிற்பகல் 1 மணிக்கப் பிறகு)*

நல்வாழ்த்துக்கள்

Rani Grinding Mills
219, Main Street,
Matale, Sri Lanka.
Telephone : 066-2425

Vijaya General Stores

(Agro Service Centre)
Dealers : Agro Chemicals, Sprayers
Fertilizer & Vegetable Seeds.

No, 85, Sri Ratnajothy Saravanamuttu Nawatha,
Colombo - 13, Tel : 327011


## 2. பிராயச்சித்தம்

-தெளிவத்தை எஸ். ஜோசப்-

பசுமையாய் விரிந்திருந்த பாயை சுருட்டி, மடித்து வைத்து விட்டது போன்ற சூன்யம்.

மலைக் குன்றுகள் - பள்ளங்கள் சரிவுகள் எல்லாம் பொட்டலாய் கிடக்கின்றன.

வெட்டப்பட்ட முருக்கை மரங்கள்மொட்டையாய் நிற்கின்றன- கள்ளிக்கம்பாய் கிளை நீட்டிக் கொண்டு .

கவ்வாத்து செய்யப்பட்ட தேயிலைச் செடிகள் காய்ந்து கிடக்கின்றன. -மூப்பிற்கு இளமையூட்டும் மூலிகை - கவ்வாத்து. இன்று பசுமையிழந்து நிற்கும் இந்தப் பத்தாம் நம்பர் மலையில் தான் பெர ட்டுக்கு களமமைத்துள்ளனர் தோட்டத்துப் பெரியார்கள்.


மலைப் பள்ளத்தில் சிலிர்த்தோடும் சிற்றாற்றின் அருகே, அடர்ந்து நிற்கும் ஆலமரத்தின் மேலண்டைக் கையில் உள்ள சமதரை யில்தான் இருக்கிறது பாலையா கணக்கரின் பங்களா. என்பதெல்லாம் இந்தப் பாலையா அதில் இருக்கும் வரைதான். வேறு கணக்கர் என்று ஒருவர் நாளைக்கே வந்துவிட்டார் என்றால் வேலையா பங்களாதான்!

பங்களாவின் முன் கதவைத் திறந்தால் முன் நிற்பது பெறட்டுக் களம். அதன் அருகே சற்று கீழே ஆயுத அறை அடுத்து பிள்ளை மடுவம், அரிசிக் காம்ரா ஆகியவை.

பெரிய கணக்கரின் கண் வட்டத்துக்குள் இருக்கட்டும் என்பதாற்றான் அவருடைய பங்களாவின் அருகிலேயே இவைகளும் கட்டப்பட்டுள்ளன. ஊரடங்கிய பின்னரென்றாலும் அங்கே ஒன்று என்றால் அவரைக் கேட்கலாமல்லவா!

பங்களா முன்கதவின் ஒரு பாதி எப்பொழுதும் மூடியே இருக்கும். மூடியுள்ள பாதிக் கதவில் தன்னை மறைத்துக் கொண்டு, பெறட்டுக் களத்தில் அய்யாவுக்குக் கிடைக்கும் அபிஷேகங்களைப் பார்த்துப் பதை பதைப்பது அம்மாவுக்கு நாளைக்கிரண்டு தடவை கிட்டும் நரக வேதனை. காலையில் ஒரு தடவை: பின் மாலையில் ஒரு தடவை. அப்படியே ஏதாகிலும் அசம்பாவிதமாக நடக்கப் போகிறதென்றால் ஓடிப் போய் தடுத்து விடும் துணிச்சல் இல்லாவிட்டாலும் பார்க்காமல் ஒதுங்கி நின்று விடும் துணிவும் கிடையாது.

ஒரு நிமிடம் கழிந்தது - மறு நிமிடம் கழிந்தது - இன்னும் ஒரு நிமிடம் கழிந்து விட்டது - கலகம் ஒன்றுமில்லை. இன்னும் ஒருவன் பாக்கி: அதோ அவனும் போய் விட்டான்; அய்யா படியேறி விட்டார்.....



# தெளிவத்தை ஜோசப்

நாவல், சிறுகதை, விமர்சனம், திரைப்படக்கதை வசனம், தொலைக்காட்சி நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்த எழுத்தாளர், 1960களில் விழிப்புணர்வுக் காலகட்டத்தில் மலைநாட்டு எழுத்தாளர்களுக்கென வீரகேசரி நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டு முறை முதல் பரிசு பெற்றுத் தனது எழுத்தாற்றலை நிரூபித்தவர். திரு. தி. மு. நித்தியானந்தனால் 1979ல் வெளியிடப்பட்ட இவருடைய "நாமிருக்கும் நாடே" சிறுகதைத் தொகுதி அந்த ஆண்டுக்கான அரச சாகித்திய விருதினைப் பெற்றது.

---

அப்பாடா என்று பெருமூச்சு விட்ட வண்ணம் உள்ளே போவதில் ஒரு திருப்தி.

அத்தனை பயங்கரமானது அவருடையவாழ்க்கை. அவருடையது மட்டுமல்ல அறிவு வளர்ச்சியில்லாத தொழிலாளர்களுக்கு மேலும்; அவர்களின் முரட்டு வளர்ச்சியைக் கண்டும் காணாதது போல் பாவனை பண்ணும் தோட்ட முதலாளிகளுக்கு கீழும் அகப்பட்டுத் தவிக்கும் அத்தனை பேர்களுடைய வாழ்வும் தான்...!

துரையின் கடிதம் சுட்டிக் காட்டிய சட்டத்தை அமல் நடத்தப் போய் நேற்று என்ன நடந்தது!

இரத்தம் ஒரு விநாடி நின்று ஓடியது; அவர் மாத்திரம் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்திருந்தால் துண்டு துண்டாக வெட்டிப் போட்டிருப்பானே!

பாதிக் கதவின் பின் பதுங்கி நின்று பார்க்கும் அம்மாவின் பார்வைபடாத தொலைவு தான் என்றாலும் "கணக்கப்பிள்ளை வெட்டுபட்டுச் செத்தார்" என்ற விசயம் காற்றோடா போய்விடும். அம்மாவின் காதில் செய்திபட்டதும் என்னமாய் துடித்திருப்பார்கள்.

மேலிருந்து அடி காகித உருவில். கீழிருந்தும் அடி கத்தி உருவில்.

"தொழிலாளார்கள் எட்டுக்கும் ஒன்பதுக்கும் மலைக்குப் போகின்றார்கள். அவர்கள் வேலைத்தளத்தில் இருக்க வேண்டிய மிக பிந்திய நேரம் ஏழரை என்பர். தோட்டத்தின் சட்டத்தை நீங்கள் சட்டை செய்வதில்லை' என்று. வெள்ளைக்காரன் இவருக்கு சுட்டிக்காட்டுவதென்றால் அது அவருடைய திறமைக்கு அவன் விடும் சவால்.

அவன் பார்த்தது 'இது தவறு' என்று சொல்லும் வரை விட்டதே



தன் தவறுதான் என்பதை உணர்த்திருந்தார். ஆகவே நேற்றிலிருந்து சற்றுக் கடுமை!

நேரம் கழித்து வேலைக்கு வந்தான் என்ற சட்ட அசட்டைக்காக 'உனக்கு வேலை கிடையாது போ' என்று அவனை விரட்டப்போய் -

'இன்றும் நேரம் கழித்து வந்தால்',....விரட்டி விடவேண்டியது தான்.... இதற்கெல்லாம் பயந்தால் சரிப்படுமா? என்று தன்னைத்தானே சமாதானம் படுத்திக் கொள்கின்றார். அந்தப் போலித் துணிவையும் மீறி, மேவி நின்று சுடுகிறது நேற்றைய நிகழ்ச்சி - ஒட்டிக் கொண்ட நெருப்பாய்.

பங்களா படியிறங்கி பெறட்டுக் களத்தை அடைந்தவர், வரிசை கோர்த்து நின்ற கூட்டத்தை கண்ணால் அளந்தார். அதிகாலைக் குளிரில் அத்தனை பேரும் விறைத்து நிற்கின்றனர்.

இராத்தூக்கத்தின் சோம்பேறித் தனத்தைக் கூட கழுவி விடாமல், பரட்டைத் தலையும் அழுக்குப் பனியனுமாய் நிற்பவர்களைப் பார்க்கையில் அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'என்னமோ யாருக்காகவோ வேலை செய்ய வருவதாகத்தான் நினைவு சோம்பேறிப் பயல்களை எல்லாம் உதைத்து ஊரை விட்டே விரட்ட வேண்டும்' என்று எண்ணியவர் இந்த மூலை தொட்டு அந்த மூலை வரை ஒரு தடவை நோட்டம் விட்டு விட்டு தலையை ஆட்டிக் கொள்ளுகின்றார்.

அவனைக் காணவில்லை!

ஆளைக் காணவில்லையே என்று பக்கவாட்டில் ஆடிய தலை இப்போது மேலும் கீழும் ஆடுகிறது. எங்கே போயிருப்பான் என்ற யூகம்.

பளபளக்கும் கத்தியுடன் பாயந்த அவனை அடித்து நொருக்கி விட்டு, "இந்தா ஒரு நாள் சம்பளம் போச்சேன்னு என்னைக் கொல்ல வந்தே! இதோ நான் மூணு நாள் சம்பளம் தர்றேன் ஆனா நாளைக்கும் டயம் பிந்தி வந்தியன்னா விரட்டத்தான் செய்வேன் என்று ஏசி விட்டு தான் வீசிய பத்து ரூபாயையே எடுத்துக் கொண்டு பட்டணம் போயிருப்பான். சிந்தனை திறமற்றவர்கள்!

மனதின் உளைச்சல் முகத்தில் உருள்கிறது. அடி மனதின் கலக்கத்தை முகக்கடுமையால் மூடிக் கொண்டு வேலை பிரிக்கத் தொடங்குகின்றார்.

'நீங்கள்ளாம் முள்ளுகுத்து நீங்கள்ளாம் முருக்கை வெட்டு; நீங்கள்ளாம் கான் வழிக்க; நீயெல்லாம் பாசம் துடைக்கப் போ...' என்று வரிசையாய் நின்ற கூட்டததை வகுத்தனுப்பிக் கொண்டிருந்தார்.

"எனக்கு பாசம் துடைக்கப் போவ ஏலாதுங்க.... ஒரே இடுப்பு வலி...." ஒருவன் முரண்டு பண்ணினான்.

"நாலு தடவை குனிஞ்சு நிமிந்தியன்னா சரியாப் போயிடும்.... போ.... வேறெ வேலை கெடையாது" என்றவர் கங்காணி எல்லாரும் நேரா மலைக்குத் தான் போவனும், லயத்துக்குப் போயிட்டு அப்பறமா வர்றவனுக்கு வேலை கொடுக்கப்படாது" என்று கூறியபடி இடுப்பு வலிக்காரனை விட்டு விலகி நடந்தார். அவனும் விடுவதாயில்லை.

"அந்த முருக்கை வெட்டு ஆள்ல ஒருத்தனை பாசம் தொடைக்கத் தள்ளிட்டு என்னை முருக்கை வெட்ட அனுப்புங்க...." எப்படிச் சமாளிப்பது என்று அவருக்கு இவன் விளக்கிக் கொடுக்கின்றான். கணக்கப் பிள்ளையின் முகம் செங்கோடிட்டது. ஒரு கணம் அவனை முறைத்துப் பார்த்தார்.

"பெறட்டுக் கலைக்கிறது நீயா இல்லை நானா? ....ஏண்டா எனக்கு வேலை சொல்லித் தர்ரியா" என்று அவர் கத்த கூட்டத்தில் நின்ற வேறு சிலர் அவனை அதட்டி விரட்டினார்.

வளைந்த முதுகும் வாடித் தொங்கும் உடலுமாக ஒட்டிக் கிடக்கும் கிழவர்களின் இடையே ஒரு வளர்ந்த கிழடின் -மறைவில் இடுங்கிக் கொண்டு நின்றான் ஒரு சோம்பேறி வாலிபன்.

"ஏண்டா சோமாறி இந்த கிழவனுகளுக்கு ஏதாச்சும் லேசு வேலை கொடுத்தா நீயும் சேர்ந்து போயிறலாமுன்னு தானே அங்கே நிக்கிறே.... ஏண்டா டேய் உன் உடம்பிலே சொரணை இல்லே... போ பாசம் துடைக்க...." என்று சத்தம் போட்டார்.

"கெழவன்னா என்ன கொமரன்னா என்ன சம்பளம் ஒண்ணுதானே...." என்று முனகியபடி அவன் நடந்தான்: கிழக் கும்பலை முறைத்துக் கொண்டே.

"நீ எல்லாம் போய் றோட்டு கூட்டு" என்று அந்த நாலைந்து கிழவர்களையும் அனுப்பி விட்டுத் திரும்பியவர் கத்தியுடன் முருக்கை வெட்டும் மலையை நோக்கி நடந்கவனை சுட்டிக் கூப்பிட்டார்.

"இங்கே வா ....!"

அவன் நின்றான். அவர்தான் அவனிடம் நடந்தார்.

கூப்பிட்ட மரியாதைக்கு நிற்கின்றானே இது போதாதா!

"அந்திக்கு வந்து பேர் சொல்லாதவர்களுக்குப் பேர் போட மாட்டேன்னு நேத்துப் படிச்சுப் படிச்சு சொன்னேனா இல்லியா?"

"ஆமா ....!"

"நீ வந்தியா "

"........"

"வந்[illegible] ...." சற்றுப் பலமாகவே வந்தது குரல்.



"வரலை..." அவன் நிற்கும் நிலையிலே ஒரு நெளிவு, தந்த பதிலிலே ஒரு பணிவு; ஊம் ஹீம் - கிடையாது.

"வரலேல்ல, உனக்குப் பேரும் விழலே...."

"ஓஹோ! பேர் விழலையா... கங்காணியைக் கேக்குறது தானே மூணரைக்கு சங்கூதுற வரைக்கும் மலையிலே நின்னேனா இல்லியான்னு ...."

"நான் கங்காணியையும் கேட்கத் தேவையில்லை. ஒரு கொங்காணியையும் கேட்கத் தேவையில்லை. உனக்கு நேத்திக்குப் பேர் கிடையாது அவ்வளவு தான். பேர் வேணுமனா போய் தொரை யைக் கேளு. உனக்கும் சம்பளம் கொடுக்கிறது அவரு எனக்கும் கொடுக்கிறது அவரு. அவர் சொல்லுறபடி தான் நான் நடக்கிறேன்... நீயும் நட....!"

"போனாப் போவட்டய்யா - பீத்தல் சம்பளம் ரெண்டே முக்கால் ரூபாய்" என்றவன் நடந்து விட்டான்.

கதவடியில் உடல் கூனி நின்ற அம்மாள் பெருமூச்சு விட்டுக் கொண்டார்கள். என்ன நடக்குமோ , ஏது நடக்குமோ என்ற பயம் அவர்களுக்கு. அவன் கையில் கத்தி வேறு மின்னுகிறது - பள பளவென்று. இவருந்தான் சரி ஏன் இப்படி 'நசி நசின்னு விழணும்.... அட வந்தா என்ன வராட்டி என்னன்னு விட்டுத் தொலைக்காமல்' என்று எண்ணியவாறு சமையல் உள்ளை நோக்கி நடந்தார்கள்.

இதிலே உள்ள இடியப்பப் பின்னல் எங்கே அம்மாவுக்குப் புரியப் போகிறது.

நேற்று மலையிலிருந்து முருகையனை விரட்டிய உடன் இவனும் அவனுடன் சேர்ந்து நடந்து விட்டதாகக் கங்காணி கூறியுள்ளார். தோட்டத்துச் சட்டப்படி சாயங்காலம் வந்து பேர் சொல்லாதது குற்றம் என்பது அவனுக்கே தெரிகிறது. இருந்தும் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் மனவிரிவு கிடையாது.

வீறாப்பாய் பேசி விட்டு வீசி நடக்கின்றான்.

அவன் கூறிக் கொண்டு போவதும் அவர் காதில் விழுகிறது. இவர் போலத்தான் அவனும் ஆடினானாம் - அடுத்த தோட்டத்துக் கணக்கப்பிள்ளை - வெட்டிக் கூறு போட்டார்களாம்!

'ஹ்ம்' என்று பெருமூச்சு விட்டவர் கைக்கம்பால் காலணியைத் தட்டிக் கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார்.

அவருடைய தலையைப் போலவே அதுவும் வழுக்கையாய் கிடந்தது.

அப்பாடா என்று அரச மரத்து நிழலில் நின்ற கணக்கப்பிள்ளை ஆறாய் ஓடிய வியர்வை ஒழுக்கை தலைத்துணியால் ஒற்றிக் கொண்டார். சலசலத்திறங்கிய அரசமரத்துக் காற்று காய்ந்துகிடந்த உடலுக்குள் என்னமாய் இறங்குகிறது. பித்தான்களைக் கழற்றிவிட்டு சட்டையைச் சற்று தூக்கிவிட்டார். கரும்புப் புவால் தடவிக் கொடுப்பது போல் உடலை நீவிச்சென்றது குளிர்காற்று. உடலைச் சிலிர்த்துக் கொண்டார். கோழி இறகால் காது குடையும் ஒரு சுகம்.

காலையில் ஆட்களை அனுப்பிய அத்தனை இடங்களையும் அலசி விட்டு வந்த அலுப்பு சற்றே இறங்குகிறது. எத்தனை மலைதான் ஏறி இறங்குவது. இன்னும் கொழுந்துமலை மட்டுமே பாக்கி என்கிறது மனம். இங்கேயே சற்று நிற்கலாம் போலவும் இருக்கிறது. "கொழுந்து மலைக்குப் போகா விட்டாலும் பாதகமில்லை. சின்னவர் கவனித்துக் கொள்வார்".

உச்சி வெயிலில் ஒரு செம்பு மோர் குடித்த திருப்தியுடன் அரச மரத்து நிழலை விட்டு நடந்தார். 'ஏர் கண்டிஷன்' அறையை விட்டு வெளியேறிய உணர்வு.

அரசமரத்துக்கு வெளியே அனலாய்த் தீய்ந்தது வெயில். தன்னையறியாமல் தலை நிமிர்ந்து அரசமரத்தைப் பார்த்தார். பாறையாய் இறங்கிய சூரிய ஒளியில் அரசமரத்து இலைகள் பளபளத்து நெளிந்தன.

கொழுந்துகாட்டையும் ஒரு எட்டு பார்த்து விட்டு வந்து விடுவோமே என்று குறுக்கில் திரும்பியவர் திடுக்கிட்டு நின்றார். வியர்த்துக் கொட்டியது.

காலையில் பெறட்டுக்கு வராதவனுக்கு இப்போது அங்கே என்னவேலை. என்ன நோக்கத்துடன் வந்திருப்பான் உற்றுப் பார்த்தார். இடைத்தூரம் கூடத்தான் என்றாலும் பார்வையின் கூர்மை ஆளைக் காட்டியது. அவனேதான். வேறு எங்கும் போகவில்லை. அதோ ஐயா வீட்டுப் படியேறுபவன் சற்று தயங்கியபடி பலாமரத்தடியில் நிற்கின்றான்.

நேற்றே 'றிப்போட் பண்ணியிருக்க வேண்டும் பாவம் தொலைகிறான் என்று விட்டது எத்தனை பாரதூரமாகி விட்டது. அவர் கொடுத்த பணத்திலேயே குடித்து விட்டு, அவர் வீட்டுப் படியிலேயே ஏறுகின்றானே.

கதவெல்லாம் சாத்தித்தான் இருக்கும் என்றாலும் தட்டினால் திறக்கமாட்டார்களா என்ன அதுவும் பட்டப்பகலில்.

'நேற்று நானே அந்த பாடுபட்டேனே அவள் என்ன செய்வாள். வீட்டில் ஒரு குஞ்சு கிடையாது. பயல்கள் எல்லாம் பட்டணத்தில் படிப்பு நோக்கி. தனியாக இருக்கும் மனுஷியை இவன் என்ன செய்வானோ! கடவுளே கொஞ்சம் பார்த்துக் கொள். கதவை அவள் திறக்காமல் தடுத்துவை நான் வந்து விடுகின்றேன்'.



நீலமேகத்தை கிழித்திருக்கும் நீள் மின்னலாய் பசுந்தேயிலையை கிழித்துக் கொண்டிறங்கினார் பாலையா.

'அவன் கையில் எந்தவிதமான ஆயுதமும் இல்லை' என்பதைக் கண்டுகொள்ளும் தூரத்திலிருந்து 'அம்மா, அம்மா' என்று அவன் தட்டும் குரல் கேட்குமளவு அவர் வந்துவிட்ட இது வரையிலும் ஒன்றும் நடக்கவில்லை.இனிமேலும் நடக்காது. நடக்கவிட மாட்டார். குசுனிக்கும் அருகேயுள்ள குளியலறையின் கதவிடை மறைந்து நின்றார்.

ஏன் வந்தான் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்.

குளியலறைக்கதவண்டையிலிருந்து அவனை அவர் நன்றாகப் பார்க்கலாம். எட்டியும் பிடிக்கலாம். அவனால் அவரைப் பார்க்க இயலாது.

அம்மாவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழையவோ அல்லது அவர்களை வெளியே இழுக்கவோ யத்தனித்தான் என்றால்..!

கம்பைப் பிடித்திருந்த ஐயாவின் வலதுகை திமிர் விட்டுக்கொள்கிறது. 'அம்மோவ்' என்று சற்றுப் பலமாகவே கதவைத் தட்டியதைத் தொடர்ந்து யாரது என்ற அம்மாவின் குரல். காலடியின் மெல்லோசை. தாழ்ப்பாள் விலகும் லொடக்கொலி. ஒரு சொட்டுத் திறந்த பிளவிடை எட்டிப்பார்த்த அம்மா "என்ன முருகையா இன்னும் ஐயா வரவில்லையே" என்றார்கள்.

தன்னையுணராமலே ஒரு எட்டு முன் நகர்கிறது ஐயாவின் கால்.

முருகையனின் கை நீளுமுன் ஐயாவின் கண் நீளுகிறது. மூன்றாவதாக அம்மாவின் கை நீளுகிறது.

பத்து ரூபாய்!

"ஐயாகிட்டே கைமாத்தாய் வாங்கினேன். அவருகிட்டேயே கொடுகிறது மரியாதை இல்லேன்னு தான்..... சொல்லுங்க ஐயாவுக்குத் தெரியும்" என்றவன் நடந்துவிட்டான்.

ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் ஐயா குளியலறைக்குள் சுருங்கினார். அந்த அறையைப் போலவே அவர் உடலும் சில்லிட்டது.

தோட்டமும் நாடும் இணையும் பவுண்டரிக்கு அருகில் தோப்பாய் மண்டிக் கிடக்கும் சோளப்புல்லின் இருண்ட அமைதிக்குள், எருமை படுத்த சேறாய் தரை மழுமழுவென்றிருக்கிறது.

நந்தியாய் முன் நிற்கும் பெரிய கலையத்தின் அருகே நால்வர் அமர்ந்திருக்கின்றனர்.

"முந்தி எல்லாம் இவ்வளவு மோசமில்லே வரவரத்தான் ரொம்ப ஆடுறான்...."

"காலையிலே பெறட்டுக்குப் போகாட்டி வேலையில்லியாம் அந்திக்குப் போகாட்டி பேர் இல்லியாம்..... இவுங்க அப்பன் வீட்டு தோட்டம் மாதிரி...."

"என் பொஞ்சாதி வயித்து வலின்னு அரைஅவரு லீவு கேட்டிருக்கா..மாட்டேன்னுட்டானாம்..".

"நாம எல்லாம் ஏண்டா ஆம்பிளைன்னு இருக்கோம் - பென்சல் பிடிக்க அவனுக்கு சோத்துக்கை இருக்கப்படாது செக்றேறால் பிடிக்க பீச்சக்கை இருக்கப்படாது..."

"அடுத்த தோட்டத்தானைப் பாரு அவனுக தான் மனுசனுக! ஆறு மாதத்துக்கு முதவே கணக்கனை வெட்டுனானுக! நான் நேருல பார்த்வண்டா... மொத வெட்டு ஒரு கை விழுந்துச்சு, அடுத்த வெட்டு வயித்துல கொதக்குன்னு குடல் சரிஞ்சிறிச்சி.. வெட்டுனவனை என்னா பண்ணிட்டானுக..."

என்ன பண்ணினார்கள் என்பது அந்த நால்வருக்கும் தெரியா விட்டாலும் மேல்கானின் இருட்டில் தரையோடு தரையாய் படுத்திருக்கும் முருகையனுக்குத் தெரியும். கணக்கப்பிள்ளை அந்தஇடத்திலேயே செத்தார். கத்தியைப் பிடித்தவனும் பிடிக்கச் சொன்னவர்களும் இப்போது கம்பிக்குள்தான். தூக்குக் கயிற்றை எதிர்நோக்கியபடி.

நாள் தவறாமல் அடி; உதை; குத்து யார் கேட்கப்போகிறார்கள். தமிழனை - அதுவும் மலை நாட்டானை மாடாய் நடத்துவதிலே தான் அவர்களுக்கும் ஒரு மகிழ்வு.

இவனுடைய தங்கையை அங்கேதான் கொடுத்திருக்கிறான். இவனுடைய உறவுக்காரப் பையன் ஒருவனையும் சந்தேகத்தின் பேரில் உள்ளே தள்ளியுள்ளனர்.

இத்தனை தெரிந்திருந்தும் இவன் என்ன செய்யப் போனானாம்



நேற்று.

முருகையன் தலையை உதறிக் கொண்டான். மாட்டேன் என்றவனை நேற்று என்னமாய் மடக்கி எடுத்தார்கள். நேற்று காலையில் - இதே இடத்தில்.

'ஒன்றுக்கு மேல் ஒன்றாய் ஊற்றி என்ன செய்கிறோம் என்றே ஒரு நிகாத் தெரியாத நிலையில் என்னை அந்த வளைவில் விட்டு மறைந்திருந்தார்களே கணக்கப் பிள்ளை அடித்து நொருக்குகையில் ஒருவன் எட்டிப் பார்த்தானா? அவர் மட்டும் வேறு எங்காவது கவனத்துடன் வந்திருந்தால் என்ன நடைபெற்றிருக்கும்-? இன்று என் கதி! அவர் அடித்த அடியில் போதை இறங்கி விட்டது. மனிதனாகத் திரும்பி விட்டேன். அவர்தான் எவ்வளவு நல்லவர். இல்லாவிட்டால் இத்தனை நாழி என்னை என்னென்ன செய்திருக்கலாம்!'

நெஞ்சிலோடிய கீறலின் கசிவு காதைக் கூர்மையாக்கியது. உற்றுக் கேட்டான். நேற்றுத் தன்னை தூண்டிய அந்த நால்வரும் இன்று மீண்டும் கூடுவார்கள் என்பது அவன் எதிர்பார்த்ததே.

"டேய் பக்கத்துத். தோட்டத்துலே இன்னும் ரெண்டு பேரைச் சாய்க்கப் போறானுகளாம். அங்கே அவனுக ரெண்டாவது ஆளை வெட்டுறதுக்கு உள்ளாற நாம ஒருத்தனையாவது வெட்டித் தீர்த்தாகனும்.... என்ன சொல்றே...."

"கட்டாயமாக" என்றவன் கத்தியுடன் எழுந்தான். எரியும் போது. விறைத்தெழும்பும் சுடுகாட்டுப் பிணமாய். நால்வரின் முகமும் சிவந்து தொங்கியது. குடிபாதி - கோபம் பாதி. கத்தியுடன் எழுந்தவனை இழுத்துத் தரையில் அமுக்கினர் மற்ற மூவரும்.

"இப்பவே இல்லையடா, விடிய நாலு மணிக்கு கணக்கன் மட்டும் தான் வெளியே வருவான் - ஒரே வீச்சு. மறு வெட்டுக்கு ஆள் நிக்கக் கூடாது... நாம நாலு பேரும் இங்கேயே இருப்போம். இதோ பாரு எவ்வளவு இருக்குன்னு தூர் எறங்கக் குடி..." என்றவாறு அவனை கள்ளில் குளிப்பாட்டி கட்டுச்சாராயத்தில் கழுவி படுக்கச் செய்தனர். கானுக்குள் இலை மறைவில் இன்னும் போத்தல்கள் மினுமினுக்கின்றன.

அவனை மல்லாத்திப் போட்டு விட்டு மற்றவர்கள் கத்தி தீட்டினர் - மாறி மாறி.

"நாளைக்குக் காலையிலே கணக்கன் பெறட்டுலே நிற்கப்படாதுன்னு படிச்சுப் படிச்சு சொல்லித்தான் அனுப்புனோம் அந்த முருகையாப் பயலை. இன்னைக்குக் காலையிலே பார்த்தா பெறட்டுக் களத்துலே கணக்கன் நிற்கிறான் கல்லுக் கணக்கா. இவனைத்தான் காணோம். நீயும் அப்படிச் செய்வியா-?"

"மாட்டேன்" ஆக்ரோசமாகக் கத்தினான். படுத்துக்கிடந்தவன் .

"நீ அப்படி செய்யமாட்டேனு தெரியும்... நீ வீரன்டா...."

மெதுவாக தலையைத் தூக்கி பார்த்தான் முருகையா கட்டையில் கத்தி தேயும் ஒலியைத் தவிர இடம் அமைதியாய் இருந்தது.

✡ ✡ ✡ ✡ ✡

கிழக்கு வெளுக்கு முன்னரே லயங்கள் புகைகின்றன. தேயும் இரவின் அமைதியை தேய்த்துக் கொண்டு கேட்கின்றது ஒரு பேரொலி - காரொலி பீலிக்கரையில் நின்ற இருவர் வந்து பேசிக் கொள்கின்றனர் "என்ன பொலிஸ் ஜீப் வந்துட்டுப் போகுது..."

"ஆமா.... இரவு இரண்டு மணியைப் போல ஒரு காரு சத்தம் கேட்டது. இதாத்தான் இருக்கும்... ஏன்னு தெரியலையே...."

"பெறட்டுக்களத்துக்கு போனா தெரிஞ்சிட்டு போவுது..."

லயத்து இருண்ட அறையுள் மூலையுடன் மூலையாக முடங்கிக் கிடந்த முருகையன் சிரித்துக் கொள்கின்றான். நேற்று அவரை வெட்ட கத்தியை ஏந்தி! அவர் கொடுத்த அடியால் வீங்கி கிடந்த அவனது வலது கையின் வலி ஏனோ குறைந்து விட்டிருந்தது.




துரைவி பதிப்பகத்தின்
புதிய வெளியீடு

சாரல் நாடனின்

**மலையகம்**
**வளர்த்த தமிழ்**

கிடைக்குமிடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு
கொழும்பு - 11.




## 3. தொடர் நினைவுகள்.

சாரல் நாடன்

ஒன்றின் பின் ஒன்றாய் உருண்டோடி விட்ட மூன்று நாட்களும் எதுவும் நடந்து விடலாம் என்ற அச்சத்தில் மடியில் நெருப்பைக்கட்டிக் கொண்டு தவித்த அம்மாளுக்கு அவர் வந்து கூறியதைக் கேட்டதும் 'அடப்பாவமே' என்று அழத் தோன்றியது.

கழுத்தில் தொங்கிய தாலிக்கயிற்றை கையில் எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டால். அம்மாளின் கண்கள் கலங்கின. அவருக்கு மனைவி என்றாலும் அவள் பெண்தானே!

இன்னொருத்தியின் தாலி அறுப்பிலே தான் தன்னுடைய மாங்கல்யம் உயிர் வாழ்கின்றதா? 'அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது' என்று அம்மாளுக்கு ஆறுதல் கூறினாலும் பொங்கி எழுகின்ற பூகம்ப குமுறல் அம்மாளை விட அவருக்கு தானே அதிகம்.

அதை எப்படி அவரால் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ள முடிகின்றது?

பட்டுப்பட்டு பழகிப் போன பூமியால் தலைமுறை தலை முறையாக வாங்கி சேகரித்த தெல்லாம் தாங்கும் சக்தியை அவருக்கு தந்ததுவோ?

அன்று நடந்ததை நினைத்து பார்த்ததில் அவர் உடல் நடுங்குகின்றது. ஒரு சற்று தாமதித்திருந்தால் என்னவாகி இருக்கும்?


ஒலித்து ஓய்கிற காற்றின் பேரிரைச்சலாய் எழுந்தாடுகின்ற நினைவின் அசைவலைகள் அவரின் சிந்தனையை கலைக்கின்றன.

பிறட்டுக்களம் முழுக்க அதே பேச்சுதான் ஆனாலும் வெளிப்படையாக அதைப் பேச ஒரு சிலர் தான் தைரியம் பெற்றிருந்தனர்.

"பந்தம் பிடிக்கின்றவர்கள் பெருகிவிட்டாங்கடா" என்றான் ஒருவன்.

"கவ்வாத்து வெட்டுகின்ற கத்திக்கு கழுத்தை வெட்டுவதற்கு எவ்வளவு நேரமாகும்" என்று சேர்த்தான் இன்னொருவன்.

## சாரல் நாடன்



அறுபதுகளின் இலக்கிய உணர்வுக் கட்டத்தில் முகிழ்ந்தவர் சாரல் நாடன். சிறுகதை, கவிதை, கவிதை, ஆய்வு , விமர்சனம் என்று தனது எழுத்துத் துறையை விரித்துக் கொண்டவர். சி. வி. வேலுப்பிள்ளை அவர்களின் பன்முக ஆற்றலை விவரிக்கும் சி. வி. சில சிந்தனைகள் தேசபக்தன் ஆசிரியர் கோ. நடேசய்யர் என்னும் ஆய்வு நூலுக்காக 1988 ஆம் வருடத்துக்கான சாகித்திய விருதினைப் பெற்றவர்.

பிறட்டுக்களம் நோக்கி முருகையா அப்போது தான் வந்துக் கொண்டிருந்தான். வரும் போதே வசை மாறி பொழிந்துக் கொண்டு தான் வந்தான் மழையோடு வருகிற இடியாய்.

"படி அளக்கிறவர்களுக்கு பாவம் நினைத்தால் உருப்படுறது எங்கே தாண்டி குதித்த நாலுப் பேரும் கம்பிக் கூட்டு போய் இருக்காங்க அவன்களோட இணை சேர இன்னும் எத்தனைப் பேரடா காத்துக்கிட்டு இருக்கீங்க" என்று அவன் போட்ட சத்தத்தில் பிறட்டுக்களம் அமைதி கண்டது.

கணக்கப்பிள்ளை பாலையாவின் உடம்பு சிலிர்த்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த முருகையாதானே 'ஆடி கறக்கிற பசுவை அடிக்கறக்கனுமுனு சொல்லுவாங்கடா கணக்கா ஒன்னியல்லாம் உயிரோட விட்டு வச்சா எங்க இரத்தத்தை உறிஞ்சிப்புடுவடா' என்று தன்மீது கத்தியை வீசிக் கொண்டு பாய்ந்தான். இன்று –

மேய்ப்பான் இல்லாது வழி தவறிச் செல்லுகின்ற செம்மறிக் கூட்டம் வழித் தெரிந்து திரும்புகின்றதா? முருகையாவின் மாறிய போக்கில் பாலையாவிற்கு அத்தகுநம்பிக்கை முளை விடுகின்றதா?

பிறட்டுகளத்தில் ஐயா வீடு திரும்பியதும் கதவோரத்தில் காத்திருந்த அம்மாள் கேட்டாள் "என்னங்க இது, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறிங்க நாளைக்கு ஒண்ணு நடக்கிறதுக்குள்ள நாம் தான் ஜாக்கிரதையாய் இருக்கனும்".

அம்மாளின் அச்சம் நியாயமானதுதான். அத்தனை நடந்த பின்னரும் அதைப்பற்றி அம்மாளிடம் ஐயா ஒரு வார்த்தை பேசி



இருப்பாரா? தன் கவலை தன்னோடு என்று அவர் இருக்கலாம் அம்மாளுக்கு -

பேச்சு வாக்கில் கேட்டு தெரிந்துக் கொண்டதை மனதுக்குள்ளாகவே மூடி மறைத்துக் கொண்டு 'அவராகவே சொல்லட்டும்' என்று இனியும் காத்திருப்பதில் அர்த்தமில்லை. அவராகவே ஆரம்பிப்பார் என்றிருந்த நம்பிக்கை அடிபட்டு போயிற்று.

கண்டதையும் சொல்லி அவளை ஏன் கலங்க வைக்க வேண்டும் என்றிருந்த கணக்க பிள்ளை ஐயா, அப்படிச் சொல்லாமல் மறைப்பதுவே விண்பயத்தை அவளிடம் வளர்க்கிறது என்பதை உணர்ந்தவராய், அம்மாளின் மனம் தாங்கிக்கொள்கிற அளவுக்கு நடந்தவற்றை மறைத்தும் குறைத்தும் சொன்னார்.

அவர் சொல்லி முடித்த போது அம்மாளுக்கு முருகையாவின் மீது அநுதாபமும், பரிவும் தான் ஏற்பட்டது. அந்த அளவுக்கு ஐயா நடந்தவற்றை மறைத்திருந்தார். அப்படிச் செய்ததில் அவருக்கொரு திருப்தி - நினைப்பிலினிக்கும் நிறைவு!

தன் செய்கையின் நியாயத்தை வெளிப்படுத்த வேண்டி தான் அவனிடம் கொடுத்த பத்து ரூபாயை திருப்பிக் கொடுத்ததன் மூலம் அவன் தான் எவ்வளவு உயர்ந்து விட்டான்!

✡ ✡ ✡ ✡ ✡

வார்த்தைகளில் சொல்ல முடியாத மகிழ்ச்சி முருகையாவுக்கு. நினைவை தடுமாற வைத்தது. தடுமாறிய நினைவிலேயே தன்னைத் தவறான செயல் செய்யத் தூண்டிவிட்ட நால்வரும் தன்னள வில் ஒட்ட முடியாத உறவாய்ப் பட்டது அவனுக்கு. அப்படியானால் அவனுறவு மேலிடத்தோடு ஒட்டக் கூடியது தானா? வேலைத் தளத்தில் கெடுபிடி என்ற ஒன்றை விட்டால் வேறு எதுவும் அவரது முப்பது வருட சேவையில் குறையாகச் சொல்வதற்கில்லை. அப்படி குறையில்லாமலிருப்பதே குறையாகப்பட்டது. உழைக்காமலே ஊதியம் பெறுகிற தொழிலாளர் களுக்கு .

உருவாகி வருகையில் உடன் பெற்று வந்து கைகளை மறந்துவிட்டு வாயையும் வயிற்றையும் மாத்திரம் நினைத்து வாழ்கிற பிரிவினரின் பெருமிணைப்பிலே அனைவரதும் அமைதிக் குலைவுதானா...?

தோட்ட சமுதாய தொழில் சிக்கலில் முடிச்சவிழ்க்கும் முனைகளில் இதுவுமொன் றென்பது பாலையா கணக்கப்பிள்ளை படித்துக் கொண்ட ஒருண்மை.

அவரின் முப்பது வருட 'சர்வீஸி'லும் முனைப்பாய்த் தெரிகிற நிகழ்ச்சிகள் பலவற்றில் உள்ளோடு கின்ற காரணம் உழைக்காமலே ஊதியம் தேடுகின்ற முயற்சியை முழு வலுவோடு தடுத்து நிறுத்துவது தான்.

அந்த முயற்சியில் அவர் கண்டதெல்லாம் ஏச்சும் பேச்சும் தான். ஆனால்; அன்று முருகையா நடந்து கொண்ட அத்தனை தீவிரமாக அதற்கு முன் ஒரு போதும் யாரும் நடந்ததில்லை.

காலம் தான் எப்படி மாறி விட்டது! அந்த மாறுதலில் தான் எத்துணை தீவிரம் இழையோடு கிறது. ஆனால் –

மனித சமுதாயத்தை உய்விக்க உதவாத மாற்றங்கள் ஆயிரம் நேர்ந்தாலும் அவர் அசரப் போவதில்லை. அவைகள் அவரை அசைக்கப் போவதில்லை.

அடர்ந்து வளர்ந்த தன் மீசையை வலக்கையால் நீவி விட்டுக் கொண்ட கணக்கப்பிள்ளை தன் தொண்டையைக் கனைத்தார். சரிசெய்து கொண்டார்.

நெஞ்சிலே நிறைந்து நிற்கிற காம்பீரியம் அவரின் அப்போதைய நிமிர்ந்து நேராக நின்று அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் தோரணையில் அப்பட்டமாய் வெளிப்பட்டது.

தன்னால் எப்படி இத்தனை ஆண்டுகள் இதே தோட்டத்தில் தொழில் பண்ண முடிந்தது?

துரைமார்களின் கோபத்துக்கு அணை போட்டுக்கொண்டும், தொழிலாளர்களின் எழுச்சியை திசை திருப்பிக் கொண்டும் வந்த தன் செய்கையின் நியாய வலுவினாலா அது சாத்தியமானது?

'ஸ்டிரிக்கா' இருக்கணும் ஆனா 'ப்ரெஸ்' பண்ணக் கூடாது. 'சேஸ்' பண்ணனும். ஆனா வயித்துல அடிக்கக் கூடாது என்ற தன் செய்கையின் நியாய பலத்தில் தான் தனது இத்தனை வருட கால வாழ்க்கையும் மலர்ந்து நிற்கின்றதுவா?

மூன்று நாட்களுக்கு முன்னர் நடந்ததுவும் தொடர்ந்து முதல்நாள் நிகழ்ந்ததுவும் முன்னொருபோதும் அவர் வாழ்க்கையில் நடந்தே இராதவை, அவர் வாழ்க்கையில் மட்டுந்தானா?

கணக்கப்பிள்ளை, கங்காணி என்றாலே கடவுளின் அவதாரம் என்று கருதி கையெடுத்துக் கும்பிட்டு 'சாமி' என்று கூப்பிட்டு வந்த



சனங்கள் தான் கையை நீட்டவும், கத்தியைத் தீட்டவும் துணிந்து விட்டார்களின்று.

தூண்டிவிட்டு துதி பாடுகிற தொழிற் சங்கங்கள் ஆர்ப்பரிப்பதெல்லாம் – இவ்வளவுக்குந்தானா? சே! என்ன வாழ்க்கை அது! உட்கொள்ளப் போகும் உணவில் உடைந்த நந்தையைக் கண்டது போன்றேதார் அருவருப்பு; அதனால் விளைந்த அலமலக்கு.

பூச்சுக்குத் தயாராகிற வெள்ளிவர்ணமாய் நிறம் மாறிக் கொண்டிருகிற வைகறைப் பொழுது. விடிந்தும் விடியாததுமான அந்த நேரத்திலே அவரின் வீட்டிற்கு முருகையா வந்து விட்டிருந்தான்.

விழித்திருந்தாலும் வேலைகளைப் பற்றி படுகையில் கிடந்தவாறே சிந்தித்துக் கொண்டிருந்த பாலையா கணக்கப்பிள்ளை கதவு தட்டும் சப்தம் கேட்டதும் திடுக்கிட்டெழுந்தார். 'மினுக் மினுக் 'கென்று சிதறி கிடந்த அறையில் தூண்டிய விளக்கொளி நிறைந்து வழிகிறது.

"யாரது? இந்த நேரத்தில் கதவைத் தட்டிக் கொண்டு" அவரின் விளிப்பிலே வேலைத்தளத்தின் கடுமை கலந்திருக்கிறது.

'நான்தாங்கையா, கதவைத் திறவுங்க' படபடக்கும் குரல் ஆளைத் தெரியாமலே அவரைக் கதவைத் திறக்கத் தூண்டியது.

முதலில் தடுமாறினாலும் முருகையாவின் குரல்தானது என்பதை அவரது முப்பது வருட சர்வீஸ் காட்டிக் கொடுத்தது. முடிவில்.

தூக்கம் விழித்த கண்கள், கலைந்துகிடந்த தலைமுடி, ததும்பி வழிகிற வார்த்தைகள் ஆமாம், அவர் வாயைத் திறக்கவிடாமலேயே அவன் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்தான். அத்தனை வேகத்தில் அவனில் பொங்கி பூரித்த உணர்ச்சி அலைகள் வெடித்துக் கொண்டிருந்தன.

அவன் சொல்வதைக் கேட்க கேட்க கணக்கப்பிள்ளை, பாலையாவின் மேனி நடுக்கம் கண்டது. கூதலில் நடுங்குமுடல் குளிரகன்றதும் நின்றாற் போல அவன் பேசிமுடித்ததும் தெளிவு பெற்ற அவர் அவனை அகல விரித்த கண்களால் நோக்கினார். அவை ஆயிரம் கதைகள் பேசின.

விளிம்பில் தேங்கிய நீரை வலக்கையில் பெருவிரலால் துடைத்துக் கொண்ட அவர் பேசினார்.

முருகையா, இந்த மண்ணோடு கலந்து விட்ட என் உழைப்பும் தொழிலும் உன்னோடும் இணைந்து விட்டதடா! முப்பது வருட

காலமாய் இந்த மண்ணின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கியதால் ஏற்பட்டிருக்கிற வெடிப்பு என் பாதங்களில் மட்டுந்தானா?

வெப்பத்தால் வெடித்து விரிந்து நிற்கிற வறண்ட நிலப்பரப்பாய் பிளந்து கறுத்துக் கிடக்கிற அவரின் பாதங்கள் அவன் அறியாததா? அவர் தொடர்கிறார்.

பிழைக்க வந்த இந்த நாட்டிலேதான் நாம் தொடர்ந்து நிலைத்துவாழ்ந்து மடியப் போகிறோம் என்று ஆகிவிட்ட இத்தனை ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னரும் கூட ஒன்று கூட முடியாதவர்களாக நாம் பிரிந்திருக்கிறோம். தொழிலாளர்களின் சுகதுக்கங்களை நாங்களறியாததல்ல. கண்டும் காணாததுபோல் இருந்து விடுவது தொழிலில் தொடர்ந்திருக்க நாங்கள் கையாளும் வழி!

அவரின் பேச்சை அவன் அங்கீகரிக்கத் தயாராயிருந்தான். அவனறிய, வேலைத்தளத்தில் முறைத்துக் கொண்ட எத்தனை பேரை வீட்டிற்கு வந்த போது அன்பாக நடாத்தி ஆதரவாக கதைத்திருக்கிறார் அவர்.

கண்முன்னே நிற்கும் போது கடூரமாய்க் கதைத்து கண்டிப்பாய் நடந்து கொண்டாலும் பார்வையிலிருந்து மறைந்த கணமே பக்கத்திலிருப்பவரிடம் தன் செய்கையின் நியாயத்தையும், அதன் வலு பாட்டாளி ஒருத்தனை பாதித்த விதத்தையும், அதை தடுத்திருக்க வேண்டிய வழியையும் சொல்லித் தீரா விட்டால் அவருக்குத் தாளாது.

எல்லாவற்றுக்கும் கூச்சமாய் அன்று தன்னிடமே எப்படி நடந்து கொண்டார்? தொழிலாளியிடம் வேலை வாங்குவதை மாத்திரமே தனது குறியாய்க் கொண்ட ஓர் அதிகாரி அப்படிச் செய்வானா? அதற்கும் மேலாக ஏதோ ஒன்று ..! இனம் கடந்த, வர்க்கம் மறந்த உணர்ச்சி அவரை இயக்குகிறதா?

அவனது கண்கள் கலங்கின. இத்தனை உத்தமரைத்தானே வெட்டித் தீர்ப்பதேன்று வீறாப்பாய் புறப்பட்டு விட்டேனன்று.

குறி தவறிய தன் முயற்சியின் தடம்மறையும் முன்னரேயே, முன்னரிலும் பார்க்க அதிதீவிரமாய் மற்றொரு முயற்சி எடுக்கப்பட்டு, அது அவரின் உயிரைப் பறித்திருக்குமேயானால்... அவனால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை.

முறை தவறிய செயலொன்றி லீடுபட்டஒருத்தனின் அறிவுக்கு எட்டும் வகையில் இன்னொரு முயற்சியும் எடுக்கப்படுகின்ற தென்றால், அதை அவன் தடுக்காதிருக் கிறானென்றால் அவனது வர்க்கம் ஒருசேர



நாணி சாகவேண்டிய நிகழ்ச்சியல்லவா அதன் பின்னைய விளைவுகளும் அதன் தொடர் நினைவுகளும்.

அவன் நிமிர்ந்து நின்றான். அவனது பார்வையிலிருந்த கம்பீரம் சாதாரண ஒரு தொழிலாளியினு டையதல்லவே அல்ல ஏன்? அவனது வாழ்க்கையிலும் கூட அந்தக் கணம் வரை அவனால் அப்படி இருந்திருக்க முடியாது...ஆனால்... இப்போது....

உழைப்பாளர் வர்க்கத்தின் மீது படிய விழுந்த ஒரு பாசை அகற்றிவிட்ட வெற்றி பெருமிதமா? வலி குறைந்து விட்டிருந்த கையையெடுத்து பாரம் இறங்கி விட்டிருந்த நெஞ்சை தடவி விட்டுக் கொண்டான் முருகையா.

"நீ செய்திருக்கும் செயல் எவ்வளவு பாரதூரமானது என்பதை உணர்கிறாயா" கணக்கப்பிள்ளை மீண்டும் ஆரம்பித்தார்.

"உன் வர்க்கத்தின் ஒரு சாராருக்கு நீ துரோகியாகி விட்டிருக்கிறாய். என் மீதிருந்த கோபமெல்லாம் இணைந்து ஒன்றாய் உன்னில் திரும்பும் வண்ணம் நடந்து கொண்டிருக்கிறாய். தன் வர்க்கமே தனக்கு எதிரியாகி விட, நியாயத்தை வலிந்து நின்று வழிபடுகிற ஒருத்தனது வாழ்க்கை மிகமிக மோசமாகி விடும் என்பதை நீ உணர்கிறாயா முருகையா" பாலையா பேசவில்லை. அவரது உணர்ச்சிகள் பேசின. உள்ளத்தின் அடி தளத்தேயிருந்து ஊற்றெடுத்துப் பிரவாகிக்கிற நன்றி பெருக்கு அவரை அப்படி பேசத் தூண்டியது. அதற்கும் மேலாக, அவரைச் சிந்திக்க வைத்தது.

மூன்று நாட்களுக்கு முன்னதாக தன் சிந்தையின் தெளிவின்மை போல விடிந்தும் விடியாததுமான காலைப்பொழுதில் "உங்களை கொல்ல நினைத்த நாலு பேரையும் ஒரு சேர அனுப்பி விட்டேங்கையா" என்று எப்போது சொன்னானோ, அப்போதே அவனை எதிர் நோக்கியிருக்கிற ஆபத்தை அவர் எதிர்பார்த்தார்.

ஆனால் அது இவ்வளவு சீக்கிரமாய் வரும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை தான். எண்ணி மூன்றே நாட்கள்.

இரண்டு முறை குறிதவறிய ஆத்திரத்தை ஒருங்கிணைத்து அவன் மீது பாய்ச்சி விட்டான், அந்த நால்வரையும் சேர்ந்தமற்றொருத்தன்.

மனித உணர்ச்சிகளின் பலவீனம் எப்படியெல்லாம் செயல் பட்டுவிடுகிறது!

இப்பவோ நாளையோ என்று ஊசலாடிக் கொண்டிருக்கிற முருகையாவின் உடலை கண்டதும் பாலையா அலறித்துடித்துவிட்டார்.

அவரது கண்கள் அருவியாய் பெருகின.

"அப்பவே சொன்னேனடா. கேட்டாயா பாவி மகனே".

ஒரே ஒரு கணம் மனதிற்கு ள்ளாகவே மூடி மறைத்துக் கொண்ட நினைவுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்த முடியாதவராய் வீட்டிற்கு விரைந்தார்.

அம்மாவுக்கு அவர் சொன்னதைக் கேட்டதும் அபபோதே அவனைப் போய் பார்க்கவேண்டும் போலிருந்தது. அது வேண்டாத தாகவே போய் விட்டது.

அவன் ஆவி பிரிந்து விட்டதாம். ஆள் விட்டிருந்தார்கள். கேதம் சொன்னவன் கேவிநின்றான். அம்மா அப்படியே ஸ்தம்பித்து விட்டாள். அவர் தலை லேஞ்சியை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டார். கோட்டுப் பையில் கையை விட்டு, அவனிடம் நீட்டினார். பச்சை நோட்டு பத்து ரூபாய்! அது, அவரது நினைவுகளோடு ஒருங்கிணைந்துவிட்ட, வர்க்கப்பழி முழுமையும் தன்னோடு சுமந்து சென்று விட்ட ஒருத்தனைப்பற்றிய நினைவுகளை மீண்டும் எழுப்பி விட்டது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற மலர்
1969


**இல்லத்தரசிகளின் உள்ளங் கவர்ந்தது**
**பிறவுன்சன் தயாரிப்புக்களே.**

**BROWNSON INDUSTRIES**
139, BANKSHALL STREET,
COLOMBO - 11
TEL: 32197






## குறிஞ்சித் தென்னவனின் குறும்பூக்கள்

### லயம்

குப்பன் வாழ் லயத்தினது கூறை
குளமாக்கும் வீட்டை மைழத் தாரை!
தப்பாது இங்கு வந்த -
தகரெமல்லாம் ஓரிரவில் -
அப்போதே அடையுங் கொழும் பூரை!

### ஆயம்மா


ஆயம்மா வாகவரும் பெண்கள்!
அவர்களுக்கோ நாவலிலே கண்கள்!
தாயம்மா மீனாட்சி -
சரசுவதி பிள்ளைகளின் -
வாயினிலே நிறைந்திருக்கும் மண் கல்!

### தலைவர்

தொழிற் சங்கத் தலைவர் தண்ட பாணி!
தொழிலாளர் இவர்கள் ஒருஏணி!
விழிசிவக்க, முகஞ்சிவக்க
மேடைகளில் பேசிடுவார்.........
தலைவர் இவர் இன்றுகங் காணி!

### தண்ணீர்

மலைகளிலே ஊற்றெணுக்கும் தண்ணீர்!
மக்கள் விழி ஊற்றெடுக்கும் கண்ணீர்!
வளமூட்டி ஒளிகொடுக்கும் -
மாவலியாய் பாயும் எனில் -
இலை, இவர்க்கு குடிப்பதற்கு தண்ணீர்!



கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் மனித உரிமை சம்பந்தமான விவகாரங்களுக்கு பொறுப்பான திரு. கைலாசமூர்த்தி அண்மையில் உயர் நீதி மன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தார். அவருடன் சமூக அபிவிருத்தி நிறுவகத்தைச் சார்ந்த திரு. நிஹால் ஹெட்டியாராச்சி, ஜனாப் சாதீக் ஆகியோர் காணப்படுகின்றனர்.

அடுத்த கொழுந்து

சுதந்திர பொன்விழா கவிதைச்சிறப்பிதழ்

**கவிதா வானில் சிறக்கடிக்கும்!**

**மலையகக் கவிதா மணிகளே!**

இலங்கை சுதந்திரமடைந்த 50 ஆண்டு பொன்விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிற வேளையில் கொழுந்து சஞ்சிகை மலையகக் கவிஞர்கள் ஐம்பது பெயர்களுடைய கவிதைகளை கொண்ட சிறப்பிதழ் ஒன்றை வெளியிட உள்ளது.

சுதந்திரம் அடைந்த இலங்கை திரு நாட்டில் தேயிலைக்கு பசுமையையும் தேநீருக்கு சாயத்தையும் தந்த மலையக மக்களின் துன்ப துயரங்கள், சோகப் பெருமூச்சுக்கள், சமூக வாழ்வியல்களை. உங்களின் கவிதா படைப்புகளின் சுட்டிக்காட்டலாம்.

உங்களின் சுதந்திரமான கருத்தோட்டங்களுக்கு கொழுந்து களம் அமைக்கும்.

உங்களின் புகைப்படத்துடன் உங்களைப்பற்றிய குறிப்புகளுடன் மார்ச் 20ம் திகதி முன்னர் ஆசிரியர் கொழுந்து த. பெ 72, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



கசப்பான உண்மைகள்

# ஒரு கவிஞனின் மரணம்

நம்மோடு வாழ்ந்த குறிஞ்சிதென்னவன் இன்று நம்மோடு இல்லை. கவிஞர் மறைந்த மறுநாள் தொடக்கம் அவரைப்பற்றி அனுதாப அறிக்கைகள் வரத்தொடங்கி விட்டன.

கொழும்பிலும் அதன் பின்னர் மகரகமை புற்று நோய் வைத்தியசாலையிலும் அந்த கவிஞரை நேரில் சென்று பார்க்காதவர்கள். அவருக்கு இறுதி அஞ்சலியை கூட செலுத்த வராதவர்கள், பத்திரிகையிலே தனது பெயர் வரவேண்டும் என்பதற்காக அனுதாப செய்திகள் வெளியிட்டனர்.

செத்தவர்க்கு அழுவதே தமது மரபாகி விட்ட காலகட்டத்தில் அந்த கவிஞனின் மரணத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

கொழும்பில் அரச மருத்துவமனையில் கவிஞர் என்ற தகவலை அவரது அருமை மகள் தாமரை தொலைபேசியின் மூலம் கண்டிக்கு அறிவித்தார்.

எனது துணைவியாரை கவிஞரை உடனடியாக போய் பார்த்து தகவல் தரும் படி தொலைபேசி மூலம் செய்தியை தெரிவிக்கிறேன்.

மறுநாள் கவிஞரை நானே நேரில் போய் பார்க்கிறேன். கவிஞர் என்னிடம் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். எழுத்தாள நண்பர்களை சந்தித்து பேச ஆசைப்படுகிறேன்.... என்கிறார்.

உடனே பத்திரிகையாளர்களுடன் தொடர்பு கொள்கிறேன். மலையகத்தில் விற்பனையாகும் முக்கிய தினசரி ஒன்றின் மலையக செய்திக்கு பொறுப்பானவரிடம் தகவலை கூறுகிறேன்.

ஆஸ்பத்திரியிலேயே இருந்தால் செய்தி போட வேண்டுமா? மறுபக்கத்தில் பதில். ஆனால், கோபத்தை அடக்கிக் கொண்டு

மறுபடியும் கவிஞரின் நிலையை எடுத்துச் சொல்கிறேன். அதே பதில். ஆத்திரத்துடன் "சினிமா நடிகையின் நாய் குட்டி போட்டால் அதனை செய்தியாக போடுவீர்கள்"... என கோபத்துடன் தொலைபேசியை வைத்து விடுகிறேன்.

பின்னர் தினகரன், தினக்குரல் தகவல் தெரிவிக்கிறேன். மறுநாள் செய்து பிரசுரமாகிறது. ஆனால் மலையகத்தை சேர்ந்த குள்ளனோ? செய்தியை வெளியிடவில்லை.

அது மாத்திரமல்ல. கவிஞர் மறைந்த பின்னர் பத்திரிகைகளுக்கு பெக்ஸ் மூலம் செயதியை அனுப்பினேன். குறிஞ்சி குள்ளன் மாத்திரம் ஏனைய பத்திரிகைகளில் செய்தி வந்த பின்னர் தான் செய்தியை வெளியிட்டான்.

குள்ளனை விட நல்ல இதயம் கொண்டவர்களும் நம்மிடம் இருக்கிறார்கள். மாலை 6 மணி செய்திக்கு அரை மணித்தியாளங்களே இருந்தது. உடனே இலங்கை வானொலி தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் திரு. மதியழகனுடன் தொடர்பு்கொண்டு தொலைபேசி மூலம் தகவலை சொன்னேன். அவரே எழுதி உடனடியாக மாலை 6 மணி செய்திக்கு கவிஞர் குறிஞ்சி தென்னவனின் மறைவு அறிவிக்கப்பட்டது.

மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட குள்ளன் செய்யாததை மதியழகன் செய்தார் என்று மற்றுமொரு கவிஞர் பாராட்டினார். கவிஞர் குறிஞ்சிதென்னவனின் மறைவுக்காக அழுகின்றவர்களையும் அனுதாப செய்தி வெளியிட்டு வருத்தம் தெரிவிப்பவர்களையும் நான் ஒன்று கேட்டுக் கொள்வேன். அவர் உயிருடன் இருக்கும் போது என்ன செய்தீர்கள்.

நம்மோடு வாழ்ந்த மலையகத்தை நேசித்த கவிஞர் என்பதற்காக அவரது குடுத்தினருக்கு நாம் எதையாவது செய்தாக வேண்டும். அதை நண்பர்களான நாம் செய்ய நடவடிக்கை எடுப்போம்.

***அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்,***

அந்தனி ஜீவா - ஆசிரியர்




# இலங்கை இந்திய தமிழர் கனவு

## இந்த இலங்கை பூமியுடன் எங்கள் உறவு எங்கே இருந்து தொடங்குகின்றது ?

நம்மில் பலர் அடிமைத்தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டோம் சிலர் திரை கடலோடி திரவியம் தேட வந்தோம். எங்கள் காலடிகள் இம்மண்ணில் பதியும் முன்னரே சிந்துநதி கரையில் வீசத்தொடங்கிய எங்கள் கலாசார காற்று தென்திசையிலும் வீசி இத்தீவை வளப்படுத்தியிருந்தது.

நவீன இலங்கையை தாங்கி நிற்கும் பொருளாதார தூண்கள் எங்கள் தொழிலாளர்கள் நாடெங்கும் வியாபார உலகில் வியாபித்து பிரகாசிப்பவர்கள் எங்கள் வர்த்தகர்கள் பாதுகாப்பு, மனித உரிமைகள், கல்வி, சுகாதாரம், கலாசார அடையாளம் பாரபட்ச வர்த்தக நடைமுறைகள் ஆகியவை பற்றிய ஆயிரம் மனக்குமுறல்களுக்கு இடையில்....

அதிகாரப்பாவலாக்கம் இனசமத்துவம் சட்டத்தின் ஆட்சி சமாதானம் ஆகியவற்றுடன் ஆசியாவின் புதிய தொழில் மய நாடு என்ற இலக்கை அடையும் பாதையில் இலங்கை வாழ் இந்தியத்தமிழர்கள் தமக்குரிய இடத்தை பெறவேண்டும்.

இந்த இலட்சிய பயணத்தில்
இந்தியத் தமிழர்களே ஒன்று கூடுங்கள்.
அரசியல் ரீதியாக அணி திரளுங்கள் !

**இலங்கை இந்திய தமிழ் காங்கிரஸ்**

கண்டி மாநகரில்
தரமான தங்க நகைகளுக்கு
நகரின் முன்னணி நிறுவனம்




**Nagalingams Jewellers**
101, Colombo Street, Kandy
Tel : 08-232545